# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வெள்ளிக்கிழமை 08.11.2024 supeedsam.com supeedsam@gmail.com





# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை ஒரு வருடத்திற்குள் தரம் உயர்த்தாவிடின் பதவியை துறப்பேன்!

( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நான் பாராளுமன்ற உறுப்பினராகி ஒரு வருடத்திற்குள் தரம் உயர்த்தாவிடின் நிச்சயமாக பதவி துறப்பேன்.

இவ்வாறு சேனைக்குடியிருப்பில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் முன்னாள் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார். குறித்த கூட்டம் நேற்று மாலை சேனைக்குடியிருப்பு ஆற்றங்கரை முருகன் ஆலயத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசுகையில் ..

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக கடந்த தேர்தலில் சவாரியில் வலம் வந்த கருணா அதை மகிந்த அஜன்டாவில் நிறைவேற்றிக் காட்டினார் .

இம்முறை ஒற்றுமை என்று வந்த எம்மவர் அந்த பாணியில் ஈடுபடுகின்றார்கள். அது சரி வராது. கடந்த 35 வருட காலமாக தேசிய பிரச்சனையை

02 ஆம் பக்கத்தில்...



## தமிழரசுக்கட்சி எதிர்க்கட்சியிலிருந்து ஜனநாயக ரீதியாக போராடும் செயற்பாட்டினை எப்போதும் முன்னெடுக்கும்

இலங்கை தமிழரசுக்கட்சி எதிர்க்கட்சியிலிருந்து ஜனநாயக ரீதியாக போராடும் செயற்பாட்டினை எப்போதும் முன்னெடுக்கும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மக்களை குழப்பி,மக்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்தி அதன்மூலம் ஆசனங்களை கைப்பற்றும் அநாகரிக செயற்பாடுகளை வேட்பாளர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இன்று மட்டக்களப்பில் உள்ள அவரது தேர்தல்

02 ஆம் பக்கத்தில்...












## தமிழரசுக்கட்சி எதிர்க்கட்சியிலிருந்து

அலுவலகத்தில் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தற்போதைய நிலையில் மக்கள் கடந்த காலத்தில் தாங்கள் விட்ட தவறுகளையும், ராஜபக்சர்களைச் சார்ந்திருந்தோரை நம்பியதால் ஏற்பட்ட தீயவிளைவுகளையும் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். தற்போது வரை மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சிக்கு மூன்று ஆசனங்கள் என்பது உறுதியாகிவிட்டது. நான்காவது ஆசனத்தை நோக்கி எமது கட்சி நகர்ந்து கொண்டிருக்கின்றது. என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,







தற்போது தேர்தல் கள நடவடிக்கைகள் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழரசுக் கட்சியின் எட்டு வேட்பாளர்களும் கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்கள் என்று பாராமல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போதுவரை மூன்று ஆசனங்கள் என்பது உறுதியாகிவிட்டது. நான்காவது ஆசனத்தை நோக்கி எமது கட்சி நகர்ந்துகொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் எமது மக்கள் பல விடயங்களை அனுபவித்திருக்கின்றார்கள். அதாவது கோட்டபாயவின் ஆட்சிக் காலத்தில் ராஜபக்சர்களைச் சூழ்ந்திருந்த இராஜாங்க அமைச்சர்கள் பற்றி மக்கள் தெளிவடைந்திருக்கின்றார்கள். பரப்புரைகளின் போது எமது கருத்துகளை நாங்கள் மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றோம். அதற்கான நல்ல அறுவடையை மக்கள் எமக்கு வழங்குவார்கள் என நம்புகின்றோம்.

இந்த நிலையில் எமது மாவட்டத்தில் மூன்று தொகுதிகளிலும் எமது பரப்புரைகள் உற்சாகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதேவேளை கடந்த காலங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், ஊழல் மோசடிகள் செய்தவர்களை மக்கள் இம்முறை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை மக்களுடனான சந்திப்பின் போது வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்தத் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்ட போது கூட போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்கள் வெளியாகியிருக்கின்றன. இவை என்ன நோக்கத்திற்காக வெளியிடப்பட்டன என்பதைப் பற்றி அறிய வேண்டியுள்ளதோடு இதன் போது கைது செய்யப்பட்டவர்களுடனான விசாரணையின் பிரகாரம் அவர்கள் குறித்த ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதுவும் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பணம், குடிபானம் என்பவற்றைக் கொடுத்து மக்களின் வாக்குகளை சூரையாடக்கூடிய நிலைமை இருப்பதனால் மக்களே இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் கோட்டபாய ராஜபக்சவை ஜனாதிபதித் தேர்தலில் 88 சதவீத மட்டக்களப்பு மக்கள் நிராகரித்திருந்தார்கள். அதன் பின்னர் அவரின் ஆட்சி அதிகார நாற்காலியில் இருந்து அவருக்கு வாக்களித்த சிங்கள மக்களே அகற்றியிருந்தார்கள்.

அந்தக் கட்சிக்கு இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பயங்கரமான பாடம் புகட்டப்பட்டிருக்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற மொட்டுக் கட்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது மூன்றரை இலட்சம் வாக்குகளையே பெற்றது.

அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பது போல இன அழிப்பில் ஈடுபட்டவர்கள் இன்று மக்களால் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியும் கூட கடந்த தேர்தலில் எந்தவொரு ஆசனத்தையும் கைப்பற்றவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மூன்று நான்கு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றது.

எனவே தமிழர்கள் ஒன்றை மட்டும் சிந்திக்க வேண்டும் தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கான பேரம்பேசும் சக்தியாக இருக்க வேண்டும். ஊழல் மோசடி இலஞ்சம் திருட்டு வீண் விரயம் என்பவற்றைத் தடுக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அதனை அவர் செயல் வடிவில் காட்ட வேண்டும். அப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை நிச்சயமாக சட்டத்தின் மூலமாகத் தண்டிக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் மக்களும் கடந்த காலத்தில் தாங்கள் விட்ட தவறுகளை, ராஜபக்சர்களையும், அவர்களைச் சார்ந்திருந்தோரையும் நம்பியதால் ஏற்பட்ட தீயவிளைவுகளையும் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். மயிலத்தமடு, மாதவணை மேயச்சற்தரை பறிபோயிருக்கின்றது. கல்முனை வடக்கு பிதேச செயலகம் பறிபோயிருக்கின்றது. இணக்க அரசியல் மூலமாக இவற்றைத் தீர்த்துத் தருவோம் என்றும், கிழக்கின் பாதுகாவர்கள் என்றும் கிழக்கின இருப்புவாதிகள் என்றும் தங்களை மார்தட்டிக் கொண்டவர்களால் எதுவுமே செய்ய முடியாமல் தங்களது பதவிகளையும், இருப்புகளையும் மாத்திரம் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

மட்டக்களப்பு மக்கள் நன்றாக ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சிக்கு அளிக்கும் வாக்குகள் மூலமாகவே தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கும் போது தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைந்து விடும்.

மாவட்ட ரீதியில் விகிதாசாரப் படி தமிழர்களுக்கு நான்கு ஆசனங்களும், முஸ்லீம்களுக்கு ஒரு ஆசனமும் பகிரப்பட வேண்டும். முஸ்லீம்களுக்கு நியாயமாகக் கிடைக்கும் பிரதிநிதித்துவம் அவர்களுக்கு கிடைக்கப்பட வேண்டும். சுயேட்சைக் குழுக்கள் தமிழர்களின் வாக்குகள் பிரிபட வேண்டும் என்ற பின்னணியில் களமிறக்கப்பட்டுள்ளார்கள்.

தேபோன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று சொல்லப்படுகின்ற கட்சிகள் கூட தமிழர்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் கட்சிகளாக இருக்க முடியுமே ஒழிய அவற்றால் ஒரு ஆசனத்தைக் கூட கைப்பற்ற முடியாது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற ரீதியில் தமிழரசுக் கட்சிதான் பிரதானமாக இருக்கின்றது. இந்தக் கட்சிக்கு தான் மக்கள் அதிகமான வாக்குகளை அளிக்க வேண்டும். அதன் மூலமாக அதிகமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும். எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்து கொண்டு ஜனநாயக ரீதியாக போராடுகின்ற அந்தச்செயற்பாட்டை தமிழரசுக்கட்சி செய்துகொண்டே இருக்கும்.

மயிலத்தமடு பிரச்சனையில் கூட கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட முன்னெடுப்புகளாலேயே அத்துமீறிய சிங்கள மக்கள் அங்கிருந்து அகற்றப்படார்கள். ஆனால் கோட்டபாயவின் ஆட்சி வந்த தன் பின்னரே அவர்கள் மீண்டும் குடியேறியிருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமைகளை மக்கள் நன்றாக விளங்கிச் செயற்பட வேண்டும்.

இந்தத் தேர்தலிலும் இலஞ்சம் கொடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமையைக் காணமுடிகின்றது. பணம், உணவுப் பொதிகள், மதுபானங்கள் என்பவற்றை இலஞ்சமாகக் கொடுத்து தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றி மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறுவதற்காக முனைகின்றார்கள்.

எனவே மக்கள் இதில் தெளிவாக இருந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதான கட்சியும், மட்டக்களப்பில் அதிகப்படியான ஆசனங்களைப் பெறக் கூடியதுமான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துக் கொள்ள முடியும். அத்துடன் எனது ஆறாம் இலக்கத்திற்கும் வாக்களியுங்கள்.

2020ம் ஆண்டு தேர்தல் போன்று இந்தத் தேர்தலும் இருக்காது என்று நம்புகின்றேன். அந்தத் தேர்தலில் பல முறைகேடுகள் நடைபெற்றன. இந்தத் தேர்தலில் அவ்வாறு இடம்பெறுவதற்கான வாய்ப்புக் குறைவாக இருக்கும் என நம்புகின்றோம்.

கிழக்கு மகாணம் பல்லின மக்கள் வாழுகின்ற மாகாணம் அதிலும் தமிழர்கள் அதிகமாக வாழுகின்ற மாகாணம். இந்த மாகாணத்தில் இலகுவாக வெற்றபெறுவதற்காக அடிப்படைவாதங்களைப் பயன்படுத்துகின்ற கட்சிகள் மீது நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்மும். இனமுரண்பாடுகள், இனமோதல்களை உருவாக்கி அதன் மூலமாக தங்களுடைய வாக்குப் பலத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என ஒரு சில அரசியற் கட்சிகளின் பிரச்சாரங்களில் இருந்து விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அண்மையில் காத்தான்குடியில் கூட அவ்வாறானாதொரு இனவாத பிரச்சாரத்தை நாங்கள் காணொளிகளில் அவதானித்தோம். அதாவது மக்களைக் குழப்பி மக்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்தி அதன் மூலம் ஆசனத்தை அதிகரிக்கின்ற அநாகரிகமான அரசியலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எந்த இனமாக இருந்தாலும் அடிப்படைவாத இனவாத ரீதியான பிரச்சாரங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஏனெனில் தேர்தல் 14ம் திகதியுடன் முடிந்துவிடும், ஆனால் இவ்வாறானவற்றால் ஏற்படும் காயங்கள் மனப்புண்ணாகவே நிலைத்திருக்கும்.

கடந்த காலத்திலும் கூட கோவிலை இடித்தோம், சந்தை கட்டினோம் என்றவாறான கருத்துகளை வெளியிட்ட மூத்த அரசியல்வாதியொருவர் தற்போது கிழக்கு மாகாணசபையைக் கைப்பற்றிவிட்டால் தமிழர்களின் தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை உடைத்துத்தள்ளுவோம். என்றவாறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்.

எனவே இவ்வாறான கருத்துகளின் மூலம் தமிழர்களின் மனங்களில் காயங்கடிளை ஏற்படுத்த வேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

## கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை ....

பேசி மக்களிடம் வாக்கு பெற்றவர்கள் மக்களின் பிரச்சினை தீர்த்து வைக்காதது அதற்கு காரணம்.

6 கிராம சேவையாளர் பிரிவு உள்ளடக்கிய இறக்காமத்திற்கு ஒரு பிரதேச செயலகமா என்றால் 29 கிராம சேவையாளர் பிரிவுகளைக்கொண்ட 39 ஆயிரம் தமிழ் மக்கள் வாழும் பெருநில பரப்புக்கு இரண்டு பிரதேச செயலர் பிரிவுகள் இரண்டு பிரதேச சபைகள் நிச்சயம் வேண்டும் .

ஆனால் ஒரு பிரதேச செயலகத்தைக் கூட முறையாக பெற முடியாத சூழல் இருந்து வந்திருக்கின்றது. கடைசி ஒரு கணக்காளரை கூட நியமிக்க முடியாத நிலைமை இருந்திருக்கின்றது.

ஆனால் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நான் தேர்வு செய்யப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் அந்த பணி நிச்சயம் பூர்த்தியாகும். இல்லாவிட்டால் எனது பதவியை துறக்கவும் தயங்க மாட்டேன்.

இங்கு அரச பயங்கரவாதம் அம்பாறை மாவட்ட தமிழருக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு இருக்கின்றது .அதனை அடித்து உடைத்து அதனை முன் செல்ல வேண்டுமாக இருந்தால் நிச்சயம் ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் தான் முடியும்.

இதுவரை சரியான பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யாதது காரணம் என்று மக்கள் கூறுகிறார்கள். எனவே சொந்தம் பந்தம் என்று சங்குக்கு வாக்களித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம்.சங்கு ஒரு போதும் வரப் போவதில்லை.

எனவே நிச்சயமாக தெரிவாகும் வீட்டுக்கு வாக்களித்தால் மட்டுமே எமது வாழ்க்கை வளமாகும்.

588 கோடி ஊழலுடன் 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகளுடன் வலம் வருகிறார் ஒருவர்.

கடந்த காலங்களிலே கொரோனா மற்றும் வெள்ள நேரங்களில் இவர்கள் எங்கு சென்றார்கள்? எங்கே இந்த 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகள்?

கப்பல் போய் படகு வந்திருக்கிறது .சில வீணாய்ப் போனவர்கள் வீணை வாசிக்க வந்திருக்கிறார்கள்.

அவர்கள் கூலிவேலை செய்தவர்கள் முதல் அனைவருக்கும் என்ன செய்தார்கள் என்பதை உலகறியும்.

இம்முறை எதுவுமே மக்கள் மத்தியில் எடுபடாது .

தமிழருக்கு தலைவன் காட்டிய சின்னம் வீட்டுச் சின்னம்.

சிலர் வீட்டுக்குள் பிரச்சினை என்கிறார்கள். பாரிய கட்சியில் பிரச்சனை வருவது வழமை . பிரச்சனையை சரி செய்வது எமது திறமை. எனவே வீட்டுக்கு வாக்களித்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள். என்றார்.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் தலைவர் துசானந்தனின் தேர்தல் காரியாலயம் திறப்பு





(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் பாராளுமன்ற தேர் தலை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் தலை வரும் அகில இலங்கை தமிழ் காங் கிரஸ் முதன்மை வேட்பாளருமான புஷ்பராஜ் துசானந்தனின் உத்தி யோகபூர்வ தேர்தல் காரியாலம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த தேர்தல் அலுவலகம் கல் முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு காளி கோவில் வீதி யில் வைத்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் தலை வரும் முதன்மை வேட்பாளரு மான புஷ்பராஜ் துசானந்தனினால் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரச்சாரக் கூட்டமும் அங்கு ஒழுங்கு செய்யப்பட்டது டன் சைக்கிள் சின்னம் இலக்கம் 6 இல் போட்டியிடும் தனக்கு ஆத ரவு வழங்குமாறும் வாக்குகளை சிதறடிக்க வேண்டாம் என கூறி யதுடன் ஒரு நாடு இரு தேசங்கள் இலக்கினை அடைய அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒருமித்து வாக்களிக்காவிட்டால் அரசியல் அநாதைகளாக்கப்படுவர்.

நிச்சயமாக இந்த தேர்தலில் எமது கட்சிக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருக்கின்றது. எமது கட்சி வடகிழக்கு உரிமைக் காக தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றது. எமது தலைவர் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் தமிழ் தேசிய இருப்புக்கு நேர்மை யாக குரல் கொடுத்து வருகின்றார் கள். அவரது கரங்களை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த நாட்டின் புதிய ஜனாதிபதியை எவ் வாறு மக்கள் உருவாக்கினார்களோ அதே போன்று இந்தப் பாராளுமன் றத் தேர்தலில் புதிய மாற்றங்களை மக்கள் விரும்ப வேண்டும்.

குறிப்பாக வடகிழக்கில் உள்ள மக்கள் ஒன்று திரண்டு திரு கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தலை மையிலான அணியை தமிழர்களின் பெரும்பான்மை சக்தியாக கொண்ட தலைமைத்துவமாக அங்கீகரிக்க ஒரு வாய்ப்பை தருவார்கள் என்று நம்புகின்றேன். அதற்கு எமது அம் பாறை மாவட்ட மக்களும் ஒரு பங்குதாரர்களாக இருப்பார்கள். எங் கள் மாவட்டத்தின் தமிழர்களின் இருப்புகளை தக்க வைக்க வேண் டுமாயின் நிச்சயமாக மக்கள் அனை வரும் ஒரே தரப்புக்கு ஆதரவளிக்க வேண்டும் . யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆகிவிட்டது. கடந்த காலங்களில் மக்கள் ஒரே தரப்புக்கு மாத்திரம் வாக்களித்து வந்தீர்கள் .ஆனால் மக்களின் இருப்பிலோ அல் லது வாழ்க்கையிலே எந்த விதமும் மாற்றமும் நடைபெறவில்லை. குறிப் பாக நமது கல்முனை வடக்கு பிர தேச செயலக விடயத்தை அரசியல் மேடைகளுக்காக கடந்த 15 வருடங் களாக பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஒரு கணக்காளரை கூட அச்செயல கத்திற்கு நியமிக்க வக்கில்லாத ஒரு தரப்பினராக கடந்த காலத்தில் இருந் திருக்கிறார்கள். தொடர்ந்தும் மக்க ளின் உரிமை சார்ந்த பிரச்சனைகளை அவர்கள் அரசியல் ஆக்கிக் கொண் டிருக்கிறார்கள்.இவ்வாறான போலி தேசியவாதிகள் எமது உரிமைகளுடன் விளையாடுகின்றவர்கள் இந்த முறை நிராகரித்து ஒரு மாற்றத்தை நிச்சயமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் வழங்க வேண்டும் என கேட் டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து இந்த தேசத்தில் இடம்பெற்று கொண்டிருக்கின்ற அந்நிய ஆக்கிரமிப்பு என்றாலும் சரி பௌத்தமயமாக்கல் என்றாலும் சரி தொடர்ந்து குரல் கொடுக்கின்ற ஒரு தலைவராக திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருக்கின்றார்.தேசி யத்திற்காக மாத்திரம் இந்த தேர்தலில் நாங்கள் களமிறங்கவில்லை. உண்மை யான தேசியத்திற்காகவே இந்த தேர் தலில் களம் இறங்கி இருக்கின்றோம் . தற்போதைய பாராளுமன்ற தேர்த லின் முக்கியத்துவம் வாக்களிப்பதன் ஊடாக தமிழ் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது கடந்த கால தேர்தல் தவறுகள் பருவ கால தேர்தல் வியாபாரிகளின் செயற்பாடு கள் எதிர்வரும் காலங்களில் நடைபெ றவுள்ள தேர்தல்கள் உட்பட அரசியல் நிலவரங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் அங்கு பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க அதிபருடன் அரச சார்பற்ற நிறுவன பிரதி நிதிகள் சந்திப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனுடன் அரச சார்பற்ற நிறுவன பிரதி நிதிகள் பழைய மாவட்ட செயலகத்தில் (07) கலந்துரையாடல் இடம் பெற் றது. பாதுகாப்பான புலம் பெயர் தல் தொடர்பாக அரச சார்பற்ற நிறு வனங்களினால் மேற்கொள்ளும் விழிப்புணர்வு செயற்திட்டங்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக அரசாங்க அதிபர் கலந்துரையாட லில் ஈடுபட்டார்.

மாவட்டத்தில் பாதுகாப்பான புலம் பெயர்தல் தொடர்பாக செயற்படும் அரச சார்பற்ற நிறுவ னங்களின் கடந்த செயற்பாடுகள் தொடர்பாக இதன்போது அளிக்கை செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரணவன் , பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வி.நவ நீதன், மாவட்ட செயலக உத்தி யோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




# எனது சேவைக்கு அங்கீகாரம் தாருங்கள்! சங்கு வேட்பாளர் பிரகாஷ் வேண்டுகோள்



( வி.ரி.சகாதேவராஜா)

'விதைத்தவன் உறங்குகிறான். முளைக்கத்துடிக்கும் விதை, சிந்திய குருதி வெல்வது உறுதி' கடந்த 20 வருடங்களாக மக்களோடு நின்று யான் செய்த சேவைக்கு அங்கீகாரம் தாருங்கள்.

இவ்வாறு விநாயகபுரத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடை பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத் தில் உரையாற்றிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஸ் வேண்டுகோள் விடுத்தார்.

கூட்டத்தில் அவர் மேலும் தெரி விக்கையில்..

2009 தொடக்கம் வைத்தியதுறை யில் கடமையாற்றியுள்ளேன். திருக் கோவில், பாண்டிருப்பு, மட்டக் களப்பு போன்ற பிரதேசங்களில் தனியார் வைத்தியசாலைகளை ஆரம்பித்து எமது இளைஞர் யுவதி களுக்கு வேலை வாய்ப்பை வழங் கியுள்ளேன்.

அத்தோடு வண்பொருளகங்க ளுக்கு பொருட்களை விநியோ கிக்கும்

தொழிலும் செய்து வருகின்றேன். இவை அனைத்திற்கும் அப்பால் நான் அங்கம் வகிக்கின்ற அமைப்பு களாக. - முதலுதவி, அனர்த்த முகா மைத்துவம் போன்ற பயிற்சிகளின் வளவாளராக செயற்படல்.

- இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தின் தலைவராகவும்,

- அம்பாறை மாவட்ட மனித உரிமை மீறல் சிவில் சமூக செயற் பாட்டாளராகவும் அம்பாறை மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் முக்கியஸ்தராகவும்,

- சனாதிபதி விருதுபெற்ற சார ணராகவும், சாரணத் தலைவராகவும் செயற்படுதல்.

- தேசிய இளைஞர் சம்மேளனங் களின் முன்னால் தலைவராகவும்

அமைப்பினூடாக விசேட தேவை யுள்ள பிள்ளைகளுக்காகவும், இளை ஞர் கழகங்களுக்காகவும்

இன்று வரை அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றேன்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்.

கடந்த 20 வருடங்களாக மக்க ளோடு

சர்வதேச செஞ்சிலுவை சங்கங் களினுடாக காணாமல் ஆக்கப்பட் டோரை தேடும் பணிகள்.

- பாண்டிருப்பு யூத் விளையாட்டுக் கழக உப தலைவராகவும்

- சொறிக்கல்முனை 'நாம் வளர' மேம்பாட்டுப் பேரவையின் ஆலோ சகராகவும்

- இன்னும் பல அமைப்புகளிலும் செயற்பட்டு வருகின்றேன்.

- உடும்பங்குலப் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவ ராகவும்

- கிழக்கு மாகாண மருத்துவ மக் கள் பேரவையின் பொதுச்செயலாள ராகவும்

பிரித்தானிய, ஐரிஸ், அவுஸ்ரேலி யன், சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கங் கள் ஊடாகவும், எகட்

அமைப்பினூடாகவும் இரண்டு மாவட்டங்களிலும் பல்லாயிரக்க ணக்கான வீடுகள் அமைத்துக்

கொடுக்கப்பட்டன. குறிப்பாக வாகரை, வாழைச்சேனை, தலவாய், தன்னாமுனை, சுவிஸ்கிராமம்,

பணிச்சையடி ஒந்தாச்சிமடம், நீலாவனை, குருந்தையடி தொடர் மாடிகள், காரைதீவு, ஆலையடி வேம்பு பொத்துவில் .

2006 ஆம் ஆண்டு திருகோண மலை சம்பூர் யுத்தத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு முகாம்களை

அமைத்து உணவு, நிவாரணம் போன்றவற்றை ஏற்படுத்தி கொடுத் துள்ளேன்.

2010 ஆம் ஆண்டு பாரிய வெள்ளப் பெருக்கின் போது படகு மூலமாக வும், உலங்குவானூர்தி மூலமாகவும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றி உணவு, நிவாரணம் போன்றவற்றை செஞ்சிலுவைச் சங்கத்தினுடாக பெற்றுக்கொடுத்துள்ளேன்.

அன்பார்ந்த என் உயிருக்கும் மேலான தமிழ் பேசும் உறவுகளே என்னை உங்களது மகனாக, அண் ணனாக, தம்பியாக நினைத்து மக்க ளோடு வீதியில் நின்று அரசியல் களமாடுவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை தந்து அரசியலில் எனது கன்னி முயற்சியை வாழ்த்தி, வாக்களியுங்கள் என்றார்.



# ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம்களை பிழையாக வழி நாடாத்துகின்ற ஒரு மகாப் பொய்யன்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஹிஸ்புல்லாஹ் தான் எம்.பி. ஆக வேண்டும் என்பதற்காக எதையும் செய்யக் கூடிய ஒருவர் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

அவர் நொந்து நூலாகிப் போன நேரத்தில் அவரை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வைத்து வெற்றி பெற வைத்தோம்.

வெற்றி பெற்றதன் பின்னர் எங்களுக்குத் தெரியாமலே மஹிந்த ராஜபக்ஸவிடம் செய்று சுகாதார அமைச்சைப் பெற்றுக் கொண்டார்.

கோட்டாபாய ஜனாதிபதி தேர்தல் கேட்ட போது சஜித் பிரமதாசவுக்கு முஸ்லிம் சமூகத்தால் அளிக்கப்படவிருந்த வாக்குகளை குறைப்பதற்காக வேண்டி பசில் ராஜபக்ஸவின் கொந்தராத்து மூலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் என்று தேர்தலில் போட்டியிட்டு சதி செய்தார்.



அவர், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களை பிழையாக வழி நாடாத்துகின்ற, பொய்த் தகவல் சொல்லுகின்ற ஒரு மகாப் பொய்யன். இதை நான் சொல்லவில்லை. அவரது தலைவரே சொல்லி இருக்கிறார்.

அவர் ஒரு மகா நடிகன், அண்டப்புளுகன் என்றெல்லாம் அவரது தலைவர் சொல்லி இருக்கின்றார்.

தேர்தலில் 42 ஆயிரம் எடுப்போம் 52 ஆயிரம் எடுப்போம் என்று ஹிஸ்புல்லாஹ் சொல்லித் திரிகிறார். அவரால் இந்தத் தேர்தலில் 22 ஆயிரத்தை தாண்ட முடியாது.

அவர் கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட போது ஒப்பந்த அடிப்படையில் இரண்டு வருடங்கள் கல்குடாவுக்கு வழங்குவதாக சொல்லி ஏமாற்றியவர்.

அந்த விடயத்தில் காத்தான்குடி மக்களும் ஹிஸ்புல்லாஹ் அநியாயம் செய்து விட்டார் என்று அன்று முதல் இன்று வரை பார்க்கினர்.

இனியும் கல்குடா, ஏறாவூர், காத்தான்குடி சமூகம் உங்களது வார்த்தைகளை நம்பிக்கை கொள்ளும் என்றா? நீங்கள் எதிர்பார்கிறீர்கள்? என்று ஹிஸ்புல்லாஹ்விடம் அமீர் அலி கேள்வி எழுப்பியுள்ளார்.

# கிராமிய மக்களின் வறுமையை போக்குவதற்கு கூட்டுறவுத்துறையின் பங்களிப்பு அவசியம்

## மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.தனேஸ்வரன் தெரிவிப்பு





(அஸ்லம் எஸ். மௌலானா)

கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான பொ.தனேஸ்வரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் ஆராயும் மாநாடு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.வேல்வேந்தன் தலைமையில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

அடுத்த ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழித்து கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

இதனடிப்படையில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக தான் பதவியேற்றது முதல் கிழக்கு மாகாண கூட்டுறவு துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நேரடி கள விஜயங்களை மேற்கொண்டு சங்கங்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவற்றின் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடி வருகின்றேன் - என்றார்.

இந்நிகழ்வில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வரணி- வாணி முன்பள்ளியில் மரநடுகை நிகழ்வு

(த.சுபேசன்)

தென்மராட்சி வரணி நாவற்காடு வாணி முன்பள்ளியில் மரநடுகை நிகழ்வு 04/11 திங்கட்கிழமை இடம்பெற்றிருந்தது.

இன்பக்கரம் அறக்கட்டளை அமைப்பினூடாக முன்பள்ளியை அழகுபடுத்துதலும்- மரநடுகையும் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்பக்கரம் அறக்கட்டளையின் மேற்படி செயற்பாட்டிற்கு சமூக சேவகர் சி.பிரபாகரன் நிதி அனுசரணை வழங்கியிருந்ததுடன் பல்வேறு உதவிகளையும் வழங்கியிருந்தார்.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் திரு.சுப்ரமணியம் கலீபன் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக

சாவகச்சேரி பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சமூக சேவகருமான சி. பிரபாகரன், ஆயுள்வேத வைத்தியர் திரு வி. மிராஜ்,






இன்பக்கரம் அறக்கட்டளையின் நிறுவுனரும் ஊடகவியலாளருமான இ.நிறஞ்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன்-மர நடுகையிலும் ஈடுபட்டிருந்தனர்.

# அநுரவுக்கு வாக்களிக்காத மக்கள் தற்போது கைசேதப்படுகின்றனர் மட்டுவில் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு ஆசனம் கிடைப்பது உறுதி; வேட்பாளர் பிர்தௌஸ் நளீமி




(எச்.எம்.எம்.பர்ஸான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு ஆசனம் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் எம்.பி.எம்.பிர்தௌஸ் நளீமி தெரிவித்தார்.

காத்தான்குடியின் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், எமது மாவட்டத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலை விட தற்போது தேசிய மக்கள் சக்தி மீதான ஆதரவு அதிகரித்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் பகுதிகளில் பிரதான அரசியல்வாதிகள் சிலர் போட்டியிடாத நிலையில் அவர்களது ஆதரவாளர்களும் தற்போது எமது கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் பிரதேசங்களிலும் பாரம்பரிய தமிழ் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கையிழந்த மக்கள் தேசிய மக்கள் சக்தியையே தமது தெரிவாகக் கொண்டுள்ளனர். அந்த வகையில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை இலகுவாகப் பெற்று ஒரு ஆசனத்தை உறுதிப்படுத்தியுள்ளோம். இரண்டாவது ஆசனத்தையும் பெறுவதற்கு முயற்சித்து வருகிறோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோழர் அநுரவுக்கு வாக்களிக்காத மக்கள் தற்போது கைசேதப்படுகின்றனர்.

இனவாதமற்ற, நாட்டின் மீது தூய்மையான அன்பு கொண்ட ஒரு தலைவருக்கு வாக்களிக்காதுவிட்டோமே என அவர்கள் கவலைப்படுகின்றனர்.

அவ்வாறானவர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி தமது வரலாற்றுக் கடமையை செய்வதன் மூலம் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் பங்காளிகளாக அவர்களும் மாற முடியும்.

நான் கடந்த பல வருடங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சமயத் தலைவர்களோடு இணைந்து சகவாழ்வுக்காக பாடுபட்டு வருகின்றேன். அதன்மூலம் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ சமயத் தலைவர்களுக்கு மத்தியில் எனக்கு சிறந்த உறவு உள்ளது. அதனைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் சமயங்களுக்கிடையே நல்லிணக்கத்தை வளர்க்க பாடுபடுவேன்.

நமது அரசியல்வாதிகள் அபிவிருத்தி என்ற பெயரில் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதிலேயே கடந்த காலங்களில் கவனம் செலுத்தினர். மக்களாகிய நாமும் கட்டிடங்களை கட்டுவதும், வீதிகளை அபிவிருத்தி செய்வதுமே அரசியல்வாதிகளின் பணிகள் என நம்பி இருக்கின்றோம். என்னைப் பொறுத்த வரைக்கும் மனிதர்களை வளப்படுத்துவதே ஓர் அரசியல் தலைமைத்துவத்தின் பிரதான பணியாக இருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

பன்மைத்துவத்துக்கு மதிப்பளித்து, அதன் பெறுமானத்தை விளங்கி, வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழ வேண்டிய ஒரு பண்பட்ட சமூகத்தை இந்த மாவட்டத்தில் உருவாக்கி, அத்தகைய ஒரு சமூகத்தை எமது எதிர்கால சந்ததிக்கு ஒப்படைக்க வேண்டும் என கனவு காண்கிறேன் என்றார்.

# தேசிய மக்கள் சக்தி இப்போதே முஸ்லிம் விரோதப் போக்கை ஆரம்பித்தால் எதிர்காலம் எப்படி பயங்கரமாயிருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்

(எப்.முபாரக்)

இந்தத் தேர்தல் காலத்திலேயே தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் விரோதப் போக்கை ஆரம்பித்தால் அவர்களது எதிர்கால 5 வருட ஆட்சி எப்படி பயங்கரமாயிருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை வேட்பாளருமான இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

புதன்கிழமை மாலை கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாணத்தின் 6 அதிகார சபை மற்றும் ஆணைக்குழுக்களுக்கு தவிசாளர்களை நியமித்துள்ளார். இவர்களில் ஒருவர் கூட முஸ்லிம் இல்லை. இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரே மாகாணம் கிழக்கு மாகாணமாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் கிழக்கு மாகாணத்திலேயே அதுவும் இந்த தேர்தல் காலத்தில் முஸ்லிம்களுக்கு வெட்டு விழுந்துள்ளது என்றால் இந்நாட்டின் ஏனைய பகுதி முஸ்லிம்களுக்கு இவர்களது ஆட்சியில் என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக ஆளணியில் முஸ்லிம்கள் எவரும் இல்லை. இதனால் இம்மாகாண முஸ்லிம்களுக்கு எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது என்று சில வாரங்களுக்கு முன் நான் கருத்துத் தெரிவித்தேன். பல ஊடகங்கள் இதனை வெளியிட்டிருந்தன.

அந்த ஆபத்து இன ரீதியான புறக்கணிப்பு என்ற வகையில் மிக விரைவாக அதுவும் இந்தத் தேர்தல் காலத்தில் நடந்துள்ளது. மக்களிடம் வாக்கு சேகரிக்கும் இந்தக் காலத்திலேயே முஸ்லிம்களுக்கு வெட்டு என்றால் அவர்கள் முஸ்லிம்களது வாக்கு தமக்கு தேவையில்லை என்று வெளிப்படையாகவே சொல்கிறார்கள் என்று தானே அர்த்தம். இப்படியான சூழ்நிலையில் எப்படி தேசிய மக்கள் சக்திக்கு நாம் வாக்களிக்கலாம் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

அது மட்டுமல்லாது அவர்களது அடுத்து வரும் 5 வருட ஆட்சிக்காலம் முஸ்லிம்களுக்கு எவ்வளவு பெரிய ஆபத்துள்ளதாக



இருக்கும் என்பதையும் நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். உணர்வு அலைகளுக்குள் சிக்கி நமது பொன்னான வாக்குகளை அவர்களுக்கு அளித்து நமது கையால் நமது கண்ணை குத்திக் கொள்ளும் நிலையை உருவாக்கிக் கொள்ளக் கூடாது.

இறைவன் நமக்கு பகுத்தறிவைத் தந்துள்ளான். சிந்தனை ஆற்றலைத் தந்துள்ளான். இவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். தேசிய மக்கள் சக்தி கூறும் சமத்துவ ஆட்சி இது தானா என்பதையும், சகல இன மக்களையும் அரவணைக்கும் ஆட்சி இதுதானா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு பொய் வாக்குறுதிகளை தந்து நமது வாக்குகளை அள்ளிச் செல்ல முயற்சிக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமுகத்திற்கு இவ்வளவு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ள போதிலும் தேசிய மக்கள் சக்தியின் எந்த ஒரு முஸ்லிம் வேட்பாளராவது இது வரை இது குறித்து வாய் திறந்துள்ளார்களா என்பதை அவதானித்துப் பாருங்கள். கட்சியின் கட்டுப்பாடுகளுக்குள் இருந்து கொண்டு அவர்களால் சமுகத்துக்காக குரல் கொடுக்க முடியாது. அநீதிகளைத் தட்டிக் கேட்க முடியாது என்பதற்கு இதைத் தவிர வேறு என்ன உதாரணம் நமக்கு வேண்டும் என்பதை சிந்திக்கும் தருணம் இது.

இன்றைய இந்த சம்பவத்தை அறிந்த சில அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்னை சந்தித்து நாங்கள் மோசம் போய் விட்டோம். இவர்களது ஏமாற்று வார்த்தைகளை நம்பி தபால் வாக்குகளை இவர்களுக்கு அளித்து விட்டோம். இனியும் இவர்களோடு பயணிக்க முடியாது. எனவே, எங்கள் குடும்பத்தினரின் வாக்குகளை இக்கட்சிக்கு சேர விடாது தடுக்க வேண்டிய பாரிய தார்மீகப் பணி எங்களுக்கு உண்டு என்று கூறினார்கள்.

இந்த சமுகத்திற்காக சமுக அநீதிக்கெதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும் பாக்கியத்தை இறைவன் எனக்கு தந்துள்ளான். என்னால் முடிந்த வரை இந்தப் பணியை நான் தொடர்ந்து செய்து வருகிறேன். நான் யாருக்கும் எந்த சுக போகத்திற்கும் விலை போகாதவன். சமுக கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் தொடர்ந்தும் ஒரே பாதையில் பயணித்து வருகின்றேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

எனவே, உங்களது பொன்னான வாக்குகளை வெறும் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு, பசப்பு வார்த்தைகளை நம்பி தேசிய மக்கள் சக்திக்கு அளித்து வீணாக்கி விடாதீர்கள். இது போன்ற அநீதிகளுக்கு எதிராவும், சமுகத்திற்காகவும் பேசக் கூடியவர்களையும் பாராளுமன்றத்துக்கு அனுப்பத் தயாராகுங்கள். அதற்காக என்னோடு இணைந்து உங்களது ஆதரவை வாக்குகள் மூலம் எனக்கு தாருங்கள் என்று அன்பான அழைப்பு விடுக்கின்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரை 243 இராணுவ கட்டளை அதிகாரி கேணல் பிரதீப்களுபான சந்தித்தார்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான் )

மட்டக்களப்பு கல்லடி 243 ராணுவ படை பிரிவின் கட்டளை அதிகாரியாக புதிதாக நியமனம் பெற்று கடமையை பொறுப்பேற்றுக்கொண்ட இராணுவ கட்டளை அதிகாரி கேணல் பிரதீப்களுபான மற்றும் லெப்டினன் கேனல் இந்திக குமார ஆகியோர் உத்தியோகபூர்வ விஜயத்தை மட்டக்களப்பு மாவட்ட புதிய செயலகத்துக்கு மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட இராணுவ கட்டளை அதிகாரி கேணல் பிரதீப்களுபான மற்றும் லெப்டினன் கேனல் இந்திக குமார

ஆகியோர் உத்தியோக பூர்வ சந்திப்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனை சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டனர் .

கலந்துரையாடலின் போது மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் இதன் போது அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மட்டக்களப்பு கல்லடி 243 இராணுவ படை பிரிவு கட்டளை அதிகாரியாக பணியாற்றிய பிரிகேடியர் சந்திம குமர சிங்க இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிலையில் மட்டக்களப்பு கல்லடி 243 இராணுவ படை பிரிவுக்கு

புதிய இராணுவ கட்டளை அதிகாரியாக கேனல் பிரதீப் களுபான கடமைகளை பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது,

இன் நினழ்வில் கேணல் தம்மிக்க வீரசிங்கவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது .

# உற்பத்திப் போருட்கள் விற்பனை கண்காட்சி



(பாறுக் ஷிஹான்)

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையல் பயிற்சி யுவதிகளின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை கண்காட்சி இன்று நடைபெற்றது.

டயகோனியா அனுசரணையுடன் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி நடாத்தி வரும் இத்தையல் பயிற்சியானது ஆசிரியை திருமதி ஜெமினா பர்வின் நெறிப்படுத்தலில் சிறப்பாக மருதமுனை பகுதியில் உள்ள அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன் போது சந்தைப் படுத்தலும் அதற்கான யுத்தி முறைகளும் தொடர்பில் விழிப்புணர்வு கருத்தரங்கினை அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி ஹபீலா அஸீஸ் தலைமையில் வளவாளராக நிந்தவூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி றிஸ்வானுல் ஜென்னா மேற்கொண்டார்.

குறித்த கண்காட்சியில் யுவதிகளினால் பயிற்சிக்காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலை சீருடை வகைகள் ஆடை அணிகலன்கள் சாரிகள் சல்வார்கள் சட்டைகள் நவநாகரீக உடுதுணிகள் என பல்வேறு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பெண் தலைமைத்துவ மற்றும் பாடசாலை கல்வியை இடைநிறுத்திய யுவதிகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது வருமானத்தை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த கண்காட்சியில் உற்பத்தி பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கான வழிவகைகளை இலகுவாக மேற்கொள்ள பல்வேறு விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

# பாராளுமன்ற போதுத்தேர்தலுக்கான அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கான தேளிவூட்டும் செயலமர்வு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (07) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் ஒழுங்கு படுத்தலின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கான தெளிவூட்டும் கலந்துரையாடல் நடைபெற்றது.

பாராளுமன்ற பொது தேர்தல்களின் போது கட்சிகள் மற்றும் சுயற்ச்சைக்குழுக்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கான நியமனம் மற்றும் இவர்களுக்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் உதவித் தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்பட்டது.

ஒரு வாக்கெண்ணல் நிலையத்திற்கு போட்டியிடும் கட்சி அல்லது குழு சார்பாக ஐந்து முகவர்கள் வீதம் நியமன் செய்ய முடியும் என்பதுடன் அஞ்சல் வாக்கெண்ணும் நிலையமொன்றிற்க இரண்டு முகவர்கள் நியமனம் வழங்க முடியும்.

மேலும் முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய விடயதானங்கள் தொடர்பாக இதன் போது தெளிவூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவருபரஞ்சினி முகுந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# அவிசாவளை தமிழ் மக்கள் ஈ.பி.டீ.பி க்கு பரிபூரண ஆதரவு

அண்மையில் அவிசாவளை நகர சபை மண்டபத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர்களான ஜெயசங்கர், நெல்சன், தர்ஷக சர்மா, லலாணி, குஷைன் காதர் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அங்கு கூடிய தமிழ் மக்கள் குறிப்பாக தோட்டப்புறத்தில் வாழும் மக்கள் தங்களது குறைபாடுகளை தெரிவித்துக் கொண்டனர். தாங்கள் பெரும்பான்மை கட்சிகளுக்கு வாக்களித்து தங்கள் வாழ்வுக்காக எந்த ஒரு நலத்திட்டங்களும் கைகூடவில்லை என மிகுந்த விசனத்துடன் தெரிவித்துக் கொண்டார்கள்.

பாடசாலை செல்வதுக்கான போக்குவரத்து பாதை சீர்கேடு, மாணவர்களின் கல்வி கற்றலுக்கான நிதி பற்றாக்குறை, மேலும் தங்களது பொருளாதார கீழ் நிலைமை போன்ற பல்வேறு அடிப்படை பிரச்சினைகள் குறித்து இதுவரை யாரும் செய்வதற்கு முன்வரவில்லை எனவும் இனிவரும் காலங்களில் பெரும்பான்மை கட்சிகளுக்கு தாங்கள் வாக்களிக்க போவதில்லை எனவும் குறிப்பிட்டு இருந்தார்கள். ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இணையவழி ஊடாக இணைந்து கொண்டு குறித்த மக்களின் அடிப்படை அன்றாட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு படிப்படியாக செய்து தருவேன் என உறுதிமொழி வழங்கியதை தொடர்ந்து அவிசாவளை மக்கள் இம்முறை தேர்தலில் வீணை சின்னத்திற்கே வாக்களிப்போம் என உறுதியாக கூறியிருந்தனர் என தேசிய பட்டியல் உறுப்பினர் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.




தாந்தாமலை, மாவடிமுன்மாரி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குட்பட்ட எல்லைப்பிரதேசத்திலுள்ள ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெறும் வடிசாரய உற்பத்தி தொடர்பில் பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த கிராம உத்தியோகத்தர்கள், சக கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட தேடுதலின் போது சட்டவிரோத உற்பத்திக்கு தயாரான கோடா 06 பரல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குறித்த பரல்களுக்கு சொந்தமான சந்தேக நபர்கள் இன்மையால் அவ்விடத்தில் அதனை அழித்துள்ளார்கள்.

# தேர்தலில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அரசியலில் ஓரங்கட்டப்படுவார்கள்

(பாறுக் ஷிஹான்)

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியாகிய (NFGG) நாம் கடந்த 18 வருடங்களாக நேர்மை, மக்கள் நலன், வாழல் மோசடிகள் அற்ற நல்லாட்சி மாற்றம் என தொடர்ச்சியாக குரல்கொடுத்தும், பாடுபட்டும் வருகின்றோம். இதன் தொடர்ச்சியாகவே இம்முறையும் நாம் தேசிய அளவில் 4 மாவட்டங்களிலே இரட்டைக் கொடி சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றோம். அந்த வகையில் அம்பாறை மாவட்டத்திலும் எமது கட்சி தனியாக போட்டியிடுகின்றது. திகாமடுல்ல மாவட்டம் பாராளுமன்றத் தேர்தல் -2024 ல் இரட்டைக் கொடி சின்னத்துக்கு வாக்களித்து எமது வாக்குகளை பெறுமதி மிக்கதாக மாற்ற அனைவரும் முன்வர வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய மன்னணி வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை ஊடக மையத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு சமகால அரசியல் தொடர்பாக நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பாக போட்டியிடும் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்களான எம்.எச். ரிஸ்வானுல் ஹக் மற்றும் வேட்பாளர் ஏ.எசு.எம்.பரீட் ஆகியோர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அங்கு அவர்கள் தத்தமது கருத்துக்களில் மேலும் தெரிவித்ததாவது;

திகாமடுல்ல மாவட்டம் பாராளுமன்றத் தேர்தல் -2024 ல் இரட்டைக் கொடி சின்னத்துக்கு வாக்களித்து எமது வாக்குகளை பெறுமதி மிக்கதாக மாற்ற அனைவரும் முன்வர வேண்டும்.நல்லாட்சிக்கான தேசிய முன்னணியாகிய (NFGG) நாம் கடந்த 18 வருடங்களாக நேர்மை, மக்கள் நலன், வாழல் மோசடிகள் அற்ற நல்லாட்சி மாற்றம் என தொடர்ச்சியாக குரல்கொடுத்தும், பாடுபட்டும் வருகின்றோம். இதன் தொடர்ச்சியாகவே இம்முறையும் நாம் தேசிய அளவில் 4 மாவட்டங்களிலே இரட்டைக் கொடிசின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றோம். அந்த வகையில் அம்பாறை மாவட்டத்திலும் எமது கட்சி தனியாக போட்டியிடுகின்றது.

இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்ற பொது தேர்தலானது, கடந்த கால தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தலாகும். இதுவரை காலமும் எமது நாட்டிலே நிலவி வந்த ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டு அந்த ஆட்சியாளர்களையே விரட்டி அடித்த மக்கள் புரட்சி 2022ல் இடம்பெற்றது.மக்கள் வேண்டிநிற்கின்ற ஆட்சி முறை மாற்றத்திற்கான இரண்டாவது முக்கியமான தேர்தலாக எதிர்வரும் பொதுத்தேர்தல் அமைந்துள்ளது. மாற்றத்திற்கான முதலாவது தேர்தலான, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, 42%மக்கள் மீககக்கு வாக்களித்த நிலையில் அனுர குமார திசாநாயக்க அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

அத்துடன் மக்களின் எதிர்பார்ப்பை அவர் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார். இருந்த போதிலும் கடந்த ஒரு மாத கால அனுபவம் இந்த புதிய ஆட்சியின் சில தடுமாற்றங்களையும் தாமதங்களையும்



நமக்கு உணர்த்துகிறது. எனவே எதிர்வருகின்ற தேர்தலை மக்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.கடந்த தேர்தலின் போது நாம் ஒரே ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு மாத்திரமே எங்களிடம் இருந்தது. எனினும் தற்பொழுது 225 பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான வாய்ப்பு எம்முடன் உள்ளது.

இம்முறை நாம் தேர்வு செய்கின்ற உறுப்பினர்கள், ஆட்சியாளர்கள் மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்றபோது அதற்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடியவர்களாகவும், அதே நேரம் மக்களின் எதிர்பார்ப்புகள் புறக்கணிக்கப்படுகின்ற போது அதனை தைரியமாக சுட்டிக்காட்டுகின்ற, அதற்காக குரல்கொடுக்கின்ற ஒரு சுயாதீனமான, தனித்துவமான பிரதிநிதியாகவும் இருத்தல் வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் இருந்தும் இந்த மாற்றத்திற்குரிய சுயாதீனமான பிரதிநிதிகளை நாம் தேர்வு செய்வதற்கான வாய்ப்பினை மீஊளஎ கொண்டு வந்துள்ளது. இதனை நமது மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

துரதிஷ்டவசமாக, கடந்த காலங்களில் நாம் தெரிவு செய்து அனுப்பிய நமது பிரதிநிதிகள் மக்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை. மக்களுக்கும் தேசத்துக்கும் விரோதமான சட்டங்களுக்கு ஒத்துழைக்கின்றவர்களாக பல தடவைகளில் இருந்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு சென்ற போதிலும் கூட மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளும் நிரந்தர தீர்வுகள் இன்றிய பிரச்சினைகளாகவே இன்னும் இருக்கின்றன.தேசத்தின் நலனில் அக்கறை கொண்டு அவர்களால் இன்னுமே சுயமாக எழுந்து நிற்க முடியவில்லை. ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்காக அவர்களால் குரல் கொடுக்கவும் முடியவில்லை. எனவேதான் இத்தேர்தலில் ஊழல், மோசடிகளில் மூழ்கியிருந்தவர்கள் அரசியலில் இருந்தே ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். இன்னும் இருப்பவர்களும் இந்த பொதுத் தேர்தலுடன் ஓரங்கட்டப்படுவார்கள்.இந்நிலையில், இந்த பொதுத் தேர்தலில் நாம் நமக்கான பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பது எப்படி? என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.ஊழல், மோசடி அற்றவர்கள்,புத்திஜீவிகள்,நாட்டுப் பற்றுள்ளவர்கள்.சமூக அக்கறையுள்ளவர்கள் என நாம் தேர்வு செய்யும் உறுப்பினர்கள் அனைத்துத்துறையிலும் பொருத்தமானவர்களாக இருக்க வேண்டும். எனவே தான் இந்தத் தேர்தலில் வாக்காளர்கள் தமது வாக்குகளை மிகப் பிரயோசனமான ஒன்றாக மாற்றிக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை NFGG அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுத்தி தந்துள்ளது.

கடந்த 18 வருட வரலாற்றினை கொண்ட மக்கள் நலன் சார்ந்த அரசியலை முதன்மைப் படுத்தி உறுதியாக உழைத்து வந்திருக்கிறது. பெரும் பெரும் அதிகாரங்கள் இல்லாத போதிலும் கூட ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் மக்களின் நலனுக்காகவும் துணிச்சலாக குரல் கொடுத்திருக்கிறது. அறிவுபூர்வமாக மக்களை வழி நடாத்துதல், பிரதேச-வாதம் இனவாதம் கடந்து மக்களை ஒற்றுமைப்படுத்துதல், அரசியலை வருமானம் தரும் தொழிலாகவன்றி சமூகப் பொறுப்பாக நிறைவேற்றுதல், போன்ற புதிய அரசியல் கலாச்சாரங்களை எமது கட்சி நடைமுறைப்படுத்தி வருகிறது. தனி நபர் கைகளில் அதிகாரம் குவிக்கப்படாத கூட்டு தலைமைத்துவ ஒழுங்கு, பதவிகள் யாருக்கும் நிரந்தர சொத்து அல்ல என்கின்ற சுழற்சி முறை பதவி பங்கீடு என்ற பல முற்போக்கு விடயங்களையும் எமது கட்சி கொள்கையாகவும் நடைமுறையாகவும் கொண்டுள்ளது.

சர்வதேசம் வரை சென்று ஜெனிவாவிலும் நமது மக்களுக்காக பேசிய கட்சியாக மீஊளஎ இருக்கிறது. இன்று மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சி முறை மாற்றத்தை பல வருடங்களாகவே தமது கொள்கையாக கொண்டு இயங்குகிற கட்சியாகவும் அது இருக்கிறது. அந்த வகையில் எதிர்வரும் தேர்தலில் மிகச் சிறந்த தெரிவாக மீஊளஎ கட்சி மக்கள் முன் தன்னை முன்னிறுத்தி உள்ளது.அதேபோன்று மக்கள் நலனுக்காக தன்னலமின்றி உழைக்கக்கூடிய வேட்பாளர்களையும் நாம் இந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் எமது கட்சி சார்பாக நிறுத்தி உள்ளோம். எதிர்வரும் தேர்தலில் நாம் காத்திருந்த ஆட்சிமுறை மாற்றத்திற்கான பங்களிப்பினை அர்த்தபூர்வமாக ஒன்றாக செய்வோம். அதே நேரம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசாங்கம் தவறுகிற போது அதற்கு எதிராக எழுந்து நின்று சுயாதீனமாக குரல் கொடுக்கக் கூடிய தகுதியும் ஆளுமையும் உள்ள பிரதிநிதிகளையும் உருவாக்குவோம்.

குறிப்பாக, இந்தத் தேர்தல் என்பது ஆளும் கட்சிக்கான அலையொன்று இருப்பதாக காட்டப்பட்டாலும், சமூகமாக நாம் நமக்கானவர்களை பிரதிநிதிகளாக தேர்வு செய்து கொள்வதில் மிக உறுதியாக இருக்க வேண்டும். இதற்குரிய தகுதியும் உரிமையும் கொண்ட NF-GG கட்சியின் இரட்டை கொடி சின்னத்துக்கு எமது வாக்குகளை வழங்கி அவற்றை பெறுமதி மிக்கதாக மாற்றுவோம் என குறிப்பிட்டனர்.


